பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 88

சனிக்கிழமை
22 பெப்ரவரி 2025

மாசி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மயங்கி வீழ்ந்து முதியவர் இறப்பு!

யாழ். பெப். 22
யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் முதியவர் ஒருவர் நேற்றுத் 11

## திஸ்ஸவிகாரைக்கு கீழே மனிதப்புதைகுழியா?



சந்தேகம் எழுப்புகிறார் அருட்தந்தை சக்திவேல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 22

யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸவிகாரை, மனிதப் புதைகுழியை மறைப்பதற்காக எழுப்பப்பட்டுள்ளதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் அரசியற்கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல். 11

தையிட்டி விகாரை

## ஊடகவியலாளர்களிடம் பொலிஸார் விசாரணை!

யாழ்ப்பாணம், பெப். 22
'தையிட்டி விகாரையை இடிக்க வாரீர்' என பேஸ்புக்கில் பகிரப்பட்ட போலியான துண்டுப்பிரசுரம் தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்களிடம் சுமார் 6 மணிநேரம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் 11



யாழ்ப்பாணம் - குருநகர்

## சிறுவர் நீதிமன்றம் அருகாக ஏராளமான ஆமையோடுகள்!

சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்பட்டவையா?

யாழ்ப்பாணம், பெப். 22
யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் உள்ள சிறுவர் நீதிமன்றத்துக்கு அருகாக ஏராளமான ஆமையோடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. 11

அர்ச்சுனா எம்.பி. தொடர்பில்

## ஒழுக்கவியல் குழுவிடம் வழங்கப்பட்டது அறிக்கை

கொழும்பு, பெப். 22
நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் 11

புதுக்கடை நீதிமன்றப் படுகொலை

## மஹரகமவில் நேற்று பெண்ணொருவர் கைது



கொழும்பு, பெப். 22
கொழும்பு - புதுக்கடை நீதிமன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுப் படுகொலை தொடர்பில், தேடப்பட்டு வந்த பெண்ணொருவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட் 11

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

பதில் பொலிஸ்மா அதிபருக்கு சபாநாயகர் அறிவுறுத்து

கொழும்பு, பெப். 22
தமது பாதுகாப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் பரிசீலனை செய்யப்பட்டு உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார். 11

வடமாகாணத்தில்

## வெப்பம் உயரும்


கொழும்பு, பெப். 22
வடமாகாணத்தில் இன்றும், எதிர்வரும் சில நாள்களும் வெப்பம் மேலும் அதிகரிக்கும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது: 11

அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில்

## முன்னணியின் அழைப்பை தமிழரசுக்கட்சி நிராகரிப்பு!

நேரம் வரும்போது பேசலாம் எனப் பதில்

யாழ்ப்பாணம், பெப். 22
புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் எந்த முன்வரைபையும் சமர்ப்பிக்காத நிலையில், அரசியலமைப்பு வரைவு தொடர்பாக விவாதிப்பது பொருத்தமாக இருக்காது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.
புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் இனப்பிரச்சினைக் 11




'முந்தி அவை முரண்டு பிடிச்சினம் இப்ப இவை முரண்டுபிடிக்கினம் எல்லாம் எங்கட விதி கண்டியளோ'

இந்திய மீனவர்களின்

## அத்துமீறிய மீன்பிடியை தடுக்குமாறு போராட்டம்

பெப். 27 யாழில்

யாழ்ப்பாணம், பெப். 22
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தீவகக் கடற்றொழில் பிரதி 11



## டிப்பர் விபத்தில் பெண் படுகாயம்

வவுனியா, பெப். 22
வவுனியா மன்னார் வீதியில் நேற்று இடம்பெற்ற டிப்பர் விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத** — திகதி 21.02.2025; சீட்டிழுப்பு இலக்கம் 3996; ஆங்கில எழுத்து H; வெற்றி இலக்கங்கள் 19 40 52 62; விசேட எழுத்து H

**ஹந்தஹண ராசி சுப பலன்** — திகதி 21.02.2025; சீட்டிழுப்பு இலக்கம் 1063; வெற்றி இலக்கினம் கன்னி; வெற்றி இலக்கங்கள் 08 18 53 61

**NLB ஜய** — திகதி 21.02.2025; சீட்டிழுப்பு இலக்கம் 022; ஆங்கில எழுத்து U; வெற்றி இலக்கங்கள் 1 8 1 4

**மெகா பவர்** — திகதி 21.02.2025; சீட்டிழுப்பு இலக்கம் 2102; ஆங்கில எழுத்து U; சுப்பர் இலக்கம் 05; வெற்றி இலக்கங்கள் 31 67 71 72

**மஹஜன சம்பத** — திகதி 21.02.2025; சீட்டிழுப்பு இலக்கம் 5754; ஆங்கில எழுத்து G; வெற்றி இலக்கங்கள் 9 9 9 3 1 2

**தன நிதானய** — திகதி 21.02.2025; சீட்டிழுப்பு இலக்கம் 1784; ஆங்கில எழுத்து Y; வெற்றி இலக்கங்கள் 14 21 32 57; விசேட எழுத்து Y

**அத சம்பத** — திகதி 21.02.2025; சீட்டிழுப்பு இலக்கம் 329; ஆங்கில எழுத்து G; வெற்றி இலக்கங்கள் 9 3 1 2

# வலி.வடக்குக் காணிகளை மக்களிடம் கையளியுங்கள்

## பாதுகாப்பு அமைச்சுசார் குழுக்கூட்டத்தில் வலியுறுத்தினார் அமைச்சர் சந்திரசேகர்

**கொழும்பு, பெப்.22**

**யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில் பொலிஸார் மற்றும் முப்படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், விடுவிக்கப்படும் காணிகளில் மக்கள் குடியிருப்புகளை நிர்மாணித்துக்கொள்ள அனுமதிக்கவேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சுசார் குழுக்கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.**

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் பாதுகாப்பு அமைச்சுசார் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வலிகாமம் வடக்கில் 2009ஆம் ஆண்டு பொலிஸார் மற்றும் முப்படையினர் வசம்23ஆயிரம்ஏக்கர்காணிகள் காணப்பட்டன. இந்தக் காணிகள்படிப்படியாக விடுவிக்கப்பட்டு வந்தன. 21ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்ட நிலையில் தற்போது 2 ஆயிரத்து 640 ஏக்கர் காணிகள் பொலிஸார் மற்றும் முப்படையினர் வசமுள்ளன. இந்தக் காணிகள் மக்கள் பயன்படுத்தும் வகையில் விடுவிக்கப்படவேண்டும். வலி.வடக்கில் அண்மைக்காலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு குடியிருப்பு இல்லையென்ற காரணம் சொல்லப்படுகின்றது. விடுவிக்கப்பட்ட காணிகளில் வீடு கட்டிக்கொள்ள அனுமதிக்க வேண்டும். அதேநேரம் பலாலி வசாவிளான் சந்தி வரையான வீதி, மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படவேண்டும். முல்லைத்தீவு கேப்பாபிலவுக் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (எ-இ)

**சுபிரி தன சம்பத** — திகதி 21.02.2025; தினம் வெள்ளிக்கிழமை; வெற்றி வாரம் 0462; ஆங்கில எழுத்து O; வெற்றி இலக்கம் 9 2 1 3 7 9

**Super Ball** — திகதி 20.02.2025; தினம் வெள்ளிக்கிழமை; சீட்டிழுப்பு வாரம் 2728; ஆங்கில எழுத்து I; வெற்றி இலக்கம் 17 30 55 79

**சனிதா** — திகதி 21.02.2025; தினம் வெள்ளிக்கிழமை; ஆங்கில எழுத்து H; வெற்றி இலக்கம் 31 42 79 80; வெற்றி வாரம் 4889

**SASIRI** — திகதி 21.02.2025; தினம் வெள்ளிக்கிழமை; வெற்றி வாரம் 0627; வெற்றி இலக்கம் 04 12 47

**லக்ன ராசி** — திகதி 21.02.2025; தினம் வெள்ளிக்கிழமை; கும்பம்; வெற்றி இலக்கம் 09 10 45 56; சீட்டிழுப்பு வாரம் 4440

**KAPRUKA** — திகதி 21.02.2025; தினம் வெள்ளிக்கிழமை; ஆங்கில எழுத்து P; சுப்பர் இலக்கம் 34; வெற்றி இலக்கம் 29 39 60 67; வெற்றி வாரம் 1904

**அத கோடிபதி** — திகதி 21.02.2025; தினம் வெள்ளிக்கிழமை; ஆங்கில எழுத்து R; வெற்றி இலக்கம் 10 53 58 67; வெற்றி வாரம் 2554

# பொலிஸாருக்கு திராணியில்லை

### கூறுகிறார் சாமர

கொழும்பு, பெப்.22

கணேமுல்ல சஞ்சீவ கொலையின் பிரதான சந்தேகநபர் டுபாயில் இருந்து வந்த இரகசியத் தகவலின் காரணமாகவே சில மணிநேரங்களுக்குள் பிடிபட்டார். பொலிஸாரின் திறமையால் அல்ல என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குற்றவாளியை கைதுசெய்யும்போது வெளியான புகைப்படங்களில் குற்றவாளியுடன் அதிகாரிகள் அன்பாக நடந்துகொள்வதுபோல் தெரிகின்றது. புகைப்படங்களை வெளியிட்டு கொலையில் தொடர்புடைய துப்பாக்கிச் சூட்டை நடத்தியவரை ஒரு ஹீரோவாகக் காட்டியுள்ளனர். இதுதொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான சில படங்கள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி கையாளப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் இதுபோன்ற விடயங்களை முன்வைப்பதற்கு முன் உண்மைகளைச் சரிபார்க்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# வடக்கு மக்களின் ஆணையை நாம் மதிக்கவேண்டும்


### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.22

பாரம்பரிய கட்சிகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு கடந்த தேர்தல்களின்போது வடக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை நாம் மதிக்கவேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பாக கடந்த தேர்தலில் இலங்கையர்களாக வாழ்வதற்கு தமக்குள்ள தேவைப்பாட்டை, அபிலாஷையை, அர்ப்பணிப்பை வடக்கு மக்கள் வெளிப்படுத்தினர். அனைத்து பாரம்பரிய கட்சிகளையும் தோற்கடித்துவிட்டே அவர்கள் அதனைச் செய்தனர். எனவே, அம்மக்களின் அர்ப்பணிப்பை நாம் மதிக்கவேண்டும் - என்றார். (ச-44)



# விவசாயிகள்மீது கைவைத்ததாலேயே பிரபாகரன், கோத்தாபயவுக்கு நிர்க்கதி!

### அரசுக்கு ரோஹித 'அட்வைஸ்'

கொழும்பு, பெப்.22

விவசாயிகள்மீது கைவைத்ததால்தான் பிரபாகரன் மற்றும் கோத்தாபய ஆகியோரின் கதை முடிந்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விவசாயிகளால் ஆட்சியைத் தீர்மானிக்கவும் முடியும். கவிழ்க்கவும் முடியும் என்பதே உண்மை.

வேலுப்பிள்ளை பிரபாகரன் அன்று மாவிலாறை மூடினார். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். என்ன நடந்தது? இறுதியில் 2009 மே மாதம் பிரபாகரனின் கதை முடிந்தது.

அதேபோலவே இரசாயன உரத்துக்குப் பதிலாக இயற்கை உரத்தைக் கொண்டுவருவதற்கு கோத்தாபய ராஜபக்ச முற்பட்டார். இறுதியில் ஐந்து வருடங்களுக்கு முன்னரே அவரும் வீடு செல்ல நேரிட்டது.

எனவே, விவசாயிகள் பற்றிச் சிந்தித்துச் செயற்படுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் உங்களுக்கும் (ஆளுங்கட்சி) அதே நிலைதான் ஏற்படக் கூடும் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திவைக்கப்பட்ட

# உள்ளூராட்சித் தேர்தல் கட்டுப்பணம் மீளளிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 22**
**2023ஆம் ஆண்டில் நடத்தப்படவிருந்து ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களால் வைப்புச்செய்யப்பட்ட கட்டுப்பணத்தை மீளப்பெறமுடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிந்துள்ளது.**

கட்டுப்பணம் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுகளைச் சமர்ப்பித்து அப்பணத்தை மீளப்பெற்றுக் கொள்ளமுடியும்.
கட்டுப்பணம் வைப்புச்செய்துள்ள குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளமுடியும்.
குறித்த காலத்துக்குள் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கான வைப்புப் பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு தாமதமின்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிர தேச சபைக்காகச் செலுத்திய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பற்றுச்சீட்டைக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் நேற்று கிளிநொச்சி தேர்தல் அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார். (ச-41,113)

பாணின் விலையை

## குறைக்காவிடின் முறையிடலாம்

யாழ்ப்பாணம், பெப்.22
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வெதுப்பகங்கள் பாணின் விலையை 10 ரூபா குறைக்காமல் விற்பனை செய்யும் பட்சத்தில் அந்த வெதுப்பகங்களுக்கு எதிராகப் பொதுமக்கள் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட வெதுப்ப உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.
அரசாங்கம் பாணின் விலையை பத்து ரூபா குறைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. அநேகமான வெதுப்பகங்கள் பாணின் விலையைக் குறைத்துள்ளன.
எனவே பாணின் விலையைக் குறைக்காத வெதுப்பகங்களுக்கு எதிராக பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-27)

## கச்சதீவுப் பெருவிழாவுக்கு முன்னேற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம், பெப்.22
கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் மார்ச் 14 ஆம் மற்றும் 15 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில் திருவிழாவுக்கான தண்ணீர்த்தாங்கிகள் மற்றும் கூடாரங்கள் உள்ளிட்ட ஏனைய பொருள்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை கடற்படையின் விசேட படகில் எடுத்துச்செல்லப் படவுள்ளன.
அதன்படி நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 15 தண்ணீர்த் தாங்கிகளும் ஏனைய 14 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து 25 தாங்கிகளும் இவ்வாறு எடுத்துச்செல்லப்படவுள்ளன. அத்துடன் சுத்திகரிக்கபட்ட குடிதண்ணீர் வசதிகள் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை கடந்தவாரம் கச்சதீவுக்கு மேலதிக மாவட்டச் செயலாளர் சிறிமோகனன் தலைமையில் சென்ற குழுவினர் அங்கே கள நிலைமைகளை ஆராய்ந்தனர். (ச- 125)

## கொடுப்பனவை விரைந்து பெறுக

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவுகளை அந்தந்தப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் எதிர்வரும் 25 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி ,பெப். 22
இயக்கச்சிப் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்டவர் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடுப் பகுதியைச் சேர்ந்தவராவார்.
புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்அவரிடமிருந்து 5.660 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.
கைதுசெய்யப்பட்டவர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ச-22, 27)



## அமெரிக்கத் தூதுவர் – சஜித் சந்திப்பு

கொழும்பு, பெப்.22
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில், அமெரிக்க - இலங்கை உறவு எமது இரு நாடுகளையும் எவ்வாறு பலப்படுத்துகிறது என்பது பற்றிக் கலந்துரையாடப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




**குடி உயிரைக் கொல்லும் எண்டு சினிமாப் படங்களுக்கு முன்னுக்கு வாற விளம்பரங்களைப் பார்த்திருப்பியள். குடிக்கிறவையின்ர உயிரை மட்டுமெண்டில்லாம சிவனே எண்டு றோட்டில போய்க்கொண்டிருந்தவையின்ர உயிரையும் உந்தக் குடி எடுக்கிற காலமாப் போட்டுது. அப்பிடி வெறி செய்த வேலையால ஒரு முன்னாள் பிரின்சிபலின்ர உயிர் அநியாயமாப் போயிருக்கு.**

**போன 15 ஆம் திகதி பூநகரி மண்ணித்தலைக்கு பிரான்ஸால வந்த ஒருத்தரும், அவரின்ர சிநேகிதர்மாரும் குடிச்சுக் குளிச்சுக் கும்மாளமடிக்கப் போயிருக்கினம், அங்க இன்னொரு பஸ்ஸில வேற ஒரு குரூப்பும் வந்து கடலுக்க குளிச்சிருக்கு. அப்ப இந்த பிரான்ஸ்காரரோட போனவைக்கும், பஸ்ஸில வந்தவைக்கும் இடையில கடும் கொழுவல். ஒருகட்டத்தில ஆளையாள் அடிக்கிற நிலைக்குப் போட்டுது. பிறகு இந்தப் பிரான்ஸ்காரரோட போன கும்பல் முன்னுக்கே வெளிக்கிட்டு வந்து, தனங்கிளப்பில றோட்டில நிண்டிருக்கினம். எப்பிடியும் யாழ்ப்பாணத்தில இருந்து மண்ணித்தலைக்கு பஸ்ஸில வந்த குரூப் அந்த வழியாத்தான் வரோணும். அப்பிடி வரேக்க மறிச்சு அடிக்கிறதுதான் பிரான்ஸ்காரரோட வந்தவையின்ர திட்டம். ஆனால் அவையின்ர கெடுகாலம், கொழும்பில இருந்து பிக்குமார் வந்த பஸ்ஸை, தங்களோட கொழுவுப்பட்டவையின்ர பஸ்ஸெண்டு மாறி நினைச்சு அதை மறிச்சு அடிக்கவெளிக்கிட்டிருக்கினம். ஆனாலும் இவை நிண்ட கோலத்தைப் பார்த்திட்டே ஒருமாதிரி அந்த பஸ்காரர் தப்பியோடத் தொடங்கிட்டினம்.**


**அந்த பஸ்ஸுக்குப் பின்னால மோட்டர்சைக்கிளில ரண்டுபேர் வந்திருக்கினம். அவையை மறிச்சு, தப்பியோடுற பஸ்ஸை பிடிக்கோணுமெண்டு மோட்டர்சைக்கிளைத் தரச்சொல்லி, இந்த வெறிக்கோஷ்டி வெருட்டி இருக்குது. ஆனால் அவை குடுக்கேலை. உடன ரண்டு பேரையும் அதிலேயே போட்டு அடிச்சுப் பிளந்துபோட்டு, ஒருத்தருக்கு மேல நிண்டு டான்ஸும் ஆடியிருக்குது இந்த வெறிக்கோஷ்டி. அந்த றோட்டால வேற வாகனங்கள் வர . அடிக்கிறதை விட்டிட்டு வயலுக்குள்ளால அந்தக் கும்பலும் ஓடிட்டுது. பிறகு அந்த வழியால வந்தவைதான் அடிபட்டு ஏலாமல் கிடந்த ரண்டுபேரையும் ஆஸ்பத்திரியில சேர்த்தவை. அதில ஒருத்தர்தான் (முன்னாள் பிரின்சிப்பல்) ஆஸ்பத்திரியில செத்தவர். மற்றவர் இன்னும் ஆஸ்பத்திரியிலதான். தனங்களப்பு வெளிக்குள்ள இப்பிடி வெறியாட்டம் ஆடினவையை லேசில பிடிக்க ஏலாது எண்டுதான் எல்லாரும் நினைச்சவை. ஆனால் அவை மறிச்ச பிக்குமார் வந்த பஸ்ஸில இருந்த வீடியோ அந்த வெறிக் கூட்டத்தை அப்பிடியே காட்டிக்குடுக்க, உடனேயே போய் பொலிஸ் அள்ளியெடுத்தந்து இப்ப விசாரிக்கினமாம். என்னதான் விசாரிச்சு தண்டனை குடுத்தாலும் வெறி செய்த வேலையால பறிபோன அப்பாவி உயிர் திரும்ப வருமோ?**

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 01 . 01 . 1936



மறைவு 19 . 02 . 2025

**உயர்திரு. செல்லையா பொன்னுசாமி (S.P. சாமி)**

(பிரபல தொழிலதிபர் S.P.சாமி)

ஊருக்கே வெளிச்சமாய்,
உறவுகளுக்கு அதிர்ஷ்டமாய்,
வேருக்கு நீர்போல
வாழ்வுக்கு ஒளிதந்த
ஒற்றை வானத்துச் சூரியனே!
தனிமரம் தோப்பாகாது.

ஆனாலும்
நீங்கள் ஒருவன் தோப்பாகி
நலிந்தவர்களுக்குக் காப்பாகி
அருந்தொண்டு ஆற்றினீர்களே!

மருத்துவ சேவையில்
மகுடம் தரித்தாற் போல்
நொதேன் மருத்துவ மனையை

உருவாக்கியது உங்கள்
மகத்துவம் தானே ஐயா!
வாழ்நாள் சாதனையாளனாய்
வரலாற்றில்
நீங்கள் நாள் பலவாய்ச் செய்த
புண்ணியங்கள் கோடிபெறும்.

சென்று வாருங்கள்
ஊரின் தவப் புதல்வனே!
உங்களுக்கு நிகர் நீங்கள் அல்லால்
பிறர் இனிப் பிறத்தல் அரிது!

உங்கள் ஆத்மா சாந்திபெற
பெருங்குளம் முத்துமாரி அம்மனை
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மணக்கும்பானூர் கண்ணன்
(புதிய நதியா நகை மாடம்)
கவிஞர் வேலணையூர் சுரேஷ்

(CS 2580) V-1

# அரசசேவை ஆட்சேர்ப்புக்கு அனுமதி

கொழும்பு, பெப்.22


அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவம் குறித்து நியமிக்கப்பட்ட குழு சமர்ப்பித்த விதந்துரைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த அறிக்கையில் 11 அமைச்சுகளின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் 5 மாகாண சபைகளில் நிலவும் 4,987 வெற்றிடங்களில் 2003 வெற்றி டங்களை நிரப்புவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ச-6)

# மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

தோற்றம் 07 . 03 . 1937



மறைவு 20 . 02 . 2025

**செல்லையா விஸ்வலிங்கம்**

**(கலாபூசணம் விருது பெற்ற ஸ்தபதி ஆச்சாரியார்)**

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா விஸ்வலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (20.02.2025) வியாழக்கிழமை மாலை 06.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இயற்கை எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி

தகவல்:
குடும்பத்தினர்.
077 432 9153, 074 190 6182

# மரண அறிவித்தல்



## சிவஞானம் சத்தியதேவி

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், யாழ் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட சிவஞானம் சத்தியதேவி அவர்கள் நேற்றுமுன்தினம் (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் - சௌந்தரம் தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - வியாகம்மா தம்பதியரின் மருமகளும், சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும், சிவசங்கர் (கனடா),சத்தியரூபி (சுவிஸ்), ரமணிசங்கர் (கனடா), நிரஞ்சனரூபி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவரஞ்சினி (கனடா), நகுலேஸ்வரன் (சுவிஸ்), நிறோஜினி (கனடா), விக்கினேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், முருகதாசன், நடராஜா, சுபத்திரா, சுந்தரதாசன், சிவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காந்திதேவி, இராசமலர், காலஞ்சென்ற சிவஞானலிங்கம் மற்றும் இந்திராபிரியதர்சினி, குகனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், தீபிகா, சர்வினி, ஆர்த்தி, நவீன், கிருஸ்ணவி, ஆராதனா, மிதுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் (கோப்பாய் வீதி, உரும்பிராய்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மகன்

சங்கர் (மகன் - கனடா) - 001 416 417 0627
ரூபி (மகள் - சுவிஸ்) - 0041 789 304 837
ரமணி (மகன் - கனடா) - 001 647 961 0624
நிரஞ்சி (மகள் - இலங்கை) - 076 914 1244
விக்கி (மருமகன் - இலங்கை) - 076 944 3367

தோற்றம் 01.02.1952

மறைவு 20.02.2025

கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

(CS/57567) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

இன்னொரு மனிதனின் நம்பிக்கையை நீங்கள் எப்படி எடுத்துக்கொள்வீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்.


– வெண்டெல் ஹோல்ம்ஸ்

# அணையாத தீ!

இலங்கையில் இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னரும் பின்னரும் வலிந்து காணாமலாக்கப்பட்ட - படையினரின் கரங்களில் ஒப்படைக்கப்பட்ட - தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் பிரமாண்டமான போராட்டமொன்று இடம்பெற்றிருக்கின்றது. காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி ஆரம்பித்த போராட்டங்கள் எட்டு ஆண்டுகள் நிறைவடைந்து, ஒன்பதாவது ஆண்டுக்குள் செல்வதை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட இந்தச் சிறப்புக் கவனவீர்ப்பில் - கைகளில் தீப்பந்தம் ஏந்தியவாறு பல நூறு தாய்மார்கள் பங்கெடுத்திருந்தனர். எட்டு வருடங்களாக, அதாவது கடந்த 2 ஆயிரத்து 920 நாள்களாக ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதென்பது மிகப் பெரும் காலவெளி. உலகில் இடம்பெற்ற மிகநீட்சியான போராட்டங்களில் காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டத்துக்கும் கனதியான பங்குண்டு. ஆனால், அந்தப் போராட்டத்துக்குரிய பதில் கிடைத்ததா? . போர் முடிவடைந்ததற்குப் பின்னர், கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கு நேரடிப் பதில் வழங்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளபோதிலும் ஏமாற்றம் ஒன்றே இங்கு மிச்சமாயிருக்கின்றது.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் இழப்பீடுகள் தேவையில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிலே தேவையென போராட்டத்தில் ஈடுபட்டுவரும் உறவுகள் திடமாகத் தெரிவித்துள்ள போதிலும், தீர்வை அல்லது தீர்வு வழங்கப்பட்டுவிட்டது என்ற மாயையை- காசால் இட்டுநிரப்பவே ஸ்ரீலங்கா அரசாங்கம் அண்மைக் காலமாகக் கங்கணம்கட்டி நிற்கின்றது. குறைந்தபட்சம், 'படையினரின் கரங்களில் ஒப்படைக்கப்பட்ட' உறவுகளுக்கு என்ன நடந்தது? என்ற தெளிவுப்பாடுகூட வழங்கப்படவில்லை. எவ்வளவு பெரிய அபத்தம் இது? தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சொல்வதைப்போன்று இலங்கையில் எந்தவொரு முறைமை மாற்றங்களும் ஏற்படவில்லை. ஓட்டோக்களின் அலங்காரங்களைப் பறிப்பதும், 'தோட்டத் தொழிலாளர்கள்' என்ற சொற்பதத்தை 'மலையக மக்கள்' என்று 'கண்ணியமாக' மாற்றுவதும் மட்டும் முறைமை மாற்றம் அல்ல. வாக்குவங்கிகளை மையப்படுத்திய கடைகெட்ட அரசியற் கலாசாரம் என்றைக்குத் தூக்கித் தூரமாக வீசப்படுகின்றதோ அன்றுதான் உண்மையான முறைமைமாற்றம் ஏற்படும். ஆனால், அத்தகையதொரு 'உண்மையான முறைமை மாற்றத்தை' ஏற்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தியினர்கூட தயாராகவில்லை என்பதே பட்டவர்த்தனமான விடயம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது. இம்முறை இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் கடுமை காட்டப்படும் என்று பிரிட்டன் சொல்கின்ற போதிலும், தீர்மானத்துக்கு பிரதான அனுசரணை வழங்கிய அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகியமை உண்மையில் இலங்கைக்குப் பெரும் சாதகமே. அதுவே யதார்த்தம். காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்காக தாய்மார்களின் கைகளிலும் மனங்களிலும் எரிந்துகொண்டிருக்கும் பெருநெருப்புக்கும் சர்வதேசமும் ஒரு பொறுப்பாளியே. சர்வதேசம் தன் கடமைகளைக் காத்திரமாக நிறை வேற்றியிருந்தால், இன்று இந்தநிலை நேர்ந்திராது என்பதே வெள்ளிடைமலை!



கடவுச்சீட்டு விநியோகம்

## ஒருநாள் விண்ணப்பங்களே 24 மணிநேரச் சேவையில்!

கொழும்பு, பெப். 22
ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்காக மட்டுமே 24 மணிநேர சேவை தற்போது இயக்கப்படுகின்றது என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்தத் திணைக்களம் மேலும் கூறியுள்ளதாவது:-
கடவுச்சீட்டுக்களை வழங்கும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்காக தற்போது 24 மணிநேரச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், அனைத்துக் கடவுச்சீட்டு விநியோகமும் இந் 24 மணிநேர சேவையூடாக அணுகப்படாது. மாறாக ஒருநாளில் கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கு விண்ணப்பிப்போருக்காக மட்டுமே இந்தச் சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.
இந்தச் சேவைகளுக்காக திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 6 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை விண்ணப்பிக்க முடியும் - என்றுள்ளது. (ச-இ)



## ஜாஎலவில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

கொழும்பு, பெப்.22
ஜாஎல, மோகன்வத்தவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கவடத்தாவைச் சேர்ந்த 29 வயது நபரே உயிரிழந்தவராவார். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணத்தைக் கண்டறியவும், சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை அடையாளம் காணவும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## சஞ்சீவ கொலை பொலிஸ் கைது



கொழும்பு, பெப்.22
புதுக்கடை நீதிமன்றத்தில் கொலை செய்யப்பட்ட கனேமுல்ல சஞ்சீவ சம்பவத்தில் நீதிமன்றத்துக்கு துப்பாக்கியைக் கொண்டு வந்த பெண்ணோடு தொடர்பைப் பேணிய பொலிஸ் அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த பெண்ணுடன் இந்த பொலிஸ் அதிகாரி தொலைபேசி ஊடாக உரையாடலில் ஈடுபட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## ரயிலுக்கு கல்வீச்சு!

பயணிக்குக் காயம்

யாழ். பெப். 22
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ரயிலுக்கு, நாவற்குழிப் பகுதியில் வைத்துக் கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.
பயணியொருவர் படுகாயம் அடைந்துள்ள நிலையில், அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-125)

## அதிவெப்பத்தால் மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, பெப்.22
கலஹாப்பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் விளையாட்டுப்பயிற்சியில் ஈடுபட்ட மாணவர்கள் பலர் அதிக வெப்பநிலை காரணமாகப் பாதிக்கப்பட்டு கலஹா பிராந்திய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அதில் இரண்டு மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக பேராதனை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
ஞாயிற்றுக்கிழமை - மாசி - 11
23.02.2025
சுபநேரம் : 09.30 - 11.00
ராகுகாலம் : 05.00 - 06.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் உங்கள் பணிகளை ஒப்படைக்க வேண்டாம்.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். செலவுகள் ஏற்படும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். விற்பனையும் லாபமும் கூடுதலாக இருக்கும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங் கள் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகள் வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**கன்னி:** மனதில் தைரியம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி வரும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் ஏற்படும். சிலருக்கு புதிய மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். பரபரப்பாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். கருத்து வேறுபாடு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். அதே நேரம் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். காரியங்கள் முடிவதில் இருந்து வந்த இழுபறி நிலை மாறி, அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மீனம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். பணிச்சுமை குறைவதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

# இனப்பிரச்சினையைத் தீர்த்தாலே புலம்பெயர் தமிழர் கால்பதிப்பர்

## சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு


**யாழ்ப்பாணம், பெப். 22**

**இந்த நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சிபெற வேண்டுமாயின் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை பலமாக்கப்படவேண்டும். இந்த மண்ணில் நீண்டகாலமாக புரையோடிப்போயுள்ள தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் தீர்வுகாணப்படவேண்டும்.**

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றி பேசப்பட்டது. ஆனால், தற்போது அது கிடப்பில் போடப்பட்டது. இந்த நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சிபெற வேண்டுமாயின் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை பலமாக்கப்படவேண்டும். வளமான இலங்கையைக் கட்டியெழுப்ப புலம்பெயர் இலங்கையர்களே வாருங்கள் என்று ஜனாதிபதி அழைத்துள்ளார். அவர்களின் தொடர்பை ஜனாதிபதி விரும்புகிறார். ஆனால், இந்த மண்ணில் நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தில் உள்ளவர்கள் பேசுவதற்குத் தயங்குகின்றனர். தற்போதைய அரசாங்கத்துக்கு சிறந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த அரிய வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ச-இ)



# பாடசாலை அபிவிருத்திப்பணிகள் இராணுவத்தினரால் முன்னெடுப்பு

**கிளிநொச்சி, பெப். 22**

கல்வி அமைச்சின் கீழுள்ள 1000 பாடசாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் முதல் நிகழ்வு, கிளிநொச்சி மாவட்டத்தின் 55 ஆவது காலாட்படைப் பிரிவின் கீழ் உள்ள முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் வை.ஏ.பி.எம் யஹாம்பத், கிளிநொச்சி மாவட்டச் செயலர், வலயக்கல்விப்பணிப்பாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர், இராணுவ உயரதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,113)

# வடக்குக்கு ஒதுக்கிய நிதி வன்னிக்கும் பகிருங்கள்

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை

வரவு - செலவுத் திட்டத்தில் வடக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதியை யாழ்.மாவட்டத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் வன்னிக்கும் வர வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பாதீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டுத் தூதுவர்களாக இருக்கலாம், அமைச்சர்களாக இருக்கலாம், ஜனாதிபதியாக இருக்கலாம். வடக்குக்கென வரும்போது யாழ்ப்பாணத்தில் மட்டும் முகாமிடுகின்றனர். வடக்கு என்பது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியது. எனினும், வன்னிக்கு பெரிதாக எவரும் வருவதில்லை. எனவே, வன்னி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். என்றார். (ச-3344)

# 'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழா!

**யாழ்ப்பாணம், பெப். 22**

தேசிய கலை இலக்கியப் பேரவையால் 'நூறு மலர்கள் மலரட்டும்' எனும் தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் புத்தக அரங்க விழாவின் 23 ஆவது நிகழ்வு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை நிகழ்வாக "ஈழத்து நூல்களை அறிவோம்" எனும் தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் இளவாலை திருமறைக் கலா மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் எஸ்.றொபின்சனின் தலைமையில் அண்ணாவியார் இராசையா மாட்டின் நினைவு அரங்கில் மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பண்டைநகர் நாயகனின் 'இரகசியங்கள்' சிறுகதைத் தொகுதி தொடர்பாக ஆசிரியர் விஜித்விமல்ராஜ் கசில்டா, வசிகரனின் 'நோவிலும் வாழ்வு' கவிதைத் தொகுதி தொடர்பாக இளம் ஆய்வாளர் அனற்ஜெனா ஜெறாட், நிலவனின் 'அபிரால் ஆகிய நானும் ஆதிரா என்றொரு அவளும்...' சிறுகதைத் தொகுப்பு பற்றி கவிஞர் வட்டக்கச்சி விநோத், தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 'தாயகம் ஆசிரியர் தலையங்கங்கள்' நூல் தொடர்பாக கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன் ஆகியோர் உரைகளை ஆற்றவுள்ளதுடன், நிகழ்ச்சித்தொகுப்பை எஃப்.ஆர்.நிறுாஜன் மேற்கொள்ளவுள்ளார். அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு கூத்தாட்டு அவைக்களத்தின் தயாரிப்பில், வி.விஜயரூபனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'பட்டறிவு' மற்றும் செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் தயாரிப்பில் சீலனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'எங்கே எங்கே குடை எங்கே?' ஆகிய சிறுவர் நாடகங்களும் இடம்பெறவுள்ளன. மேலும் இந்த நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் பாடசாலை மண்டபத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளன. (ச-25)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பாதுகாப்பு உத்தியோகத்தர்
ஆட்சேர்ப்பு வெற்றிடம்
கைதடி, குருநகர்
12 மணித்தியாலம்
OIC 1750 /=, SSO 1700 /=, JSO 1600
மேலதிக தொடர்புகளுக்கு:
தொடர்பு: 075 363 2025

## வீடு வாடகைக்கு

ஸ்ரான்லி றோட், சிற்றி ஹாட்வெயாருக்கு அருகாமையில் மூன்று அறைகள், சமையலறை மற்றும் வீட்டுடன் இணைந்த மலசல கூடம் மற்றும் குளியலறைகளுடன் புத்தம் புதிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனாங்கள், குடும்பங்கள், வைத்தியசாலைக்ளில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
(GS/57566) J-1

077 247 8017, 077 707 0081



# திருக்கேதீச்சர பாதயாத்திரை செல்வச்சந்நிதியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.22

சிவனுக்குரிய பிரதான விரதங்களில் ஒன்றான மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை, திருக்கேதீச்சரம் திருத்தலப் பாதயாத்திரிகர்கள் சேவா சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கேதீச்சரம் ஆலயம் நோக்கிய பாதயாத்திரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. பாதயாத்திரைக் குழுவினர் தொடர்ச்சியாகப் பல இந்து ஆலயங்களைத் தரிசித்தவாறு மகாசிவராத்திரி அன்று திருக்கேதீச்சரம் ஆலயத்தைச் சென்றடையவுள்ளனர். (ச-33-66)

# நினைவேந்தலும் கலந்துரையாடலும்

பவ்ரல் அமைப்பின் நீண்டகாலச் செயற்பாட்டாளர் அமரர் சிறீதரன் சபாநாயகத்தின் நினைவஞ்சலி நிகழ்வு அரியாலை, ஏ9வீதி, நெடுங்குளம் சந்தி, யாழ்ப்பாணம் சர்வோதய தலைமையகத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து முன்னாள் தேர்தல் ஆணையாளர் முகமட் நிகழ்த்தவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (ச-41)

# தங்க ஆபரணம் கண்டெடுப்பு

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் தங்க ஆபரணமொன்று கண்டெடுக்கப்பட்டு உத்தியோத்தர் ஒருவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி அலுவலக நாள்களில் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ச-இ)

கிளிநொச்சி உருத்திரபுரீசுவரர் சிவாலயம்
உருத்திரபுரம் - கிளிநொச்சி

## விசேட பொதுக்கூட்டம் - 2025

எதிர்வரும் 07.03.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 2018 - 2023 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான மீளாய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை சமர்ப்பிக்கும் விசேட பொதுக்கூட்டம் கரைச்சிப்பிரதேச செயலர் அவர்களின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளது. அனைத்து சிவனடியார்களும் உறுப்பினர்களும், அங்கத்தவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

செயலாளர்,
உருத்திரபுரீசுவரர்சிவாலய அறங்காவலர் சபை,
உருத்திரபுரம்.
(28932) (N-1)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது)

## கூறுவிலை கோரல்

சங்கத்தின் எரிபொருள் நிலையம் அமைந்துள்ள வளாகத்தில் தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான கூறுவிலை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து கோரப்படுகின்றது. வேலையின் விபரம் அடங்கிய விண்ணப்பத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 250.00 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை மூடிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான கூறுவிலை " எனக் குறிப்பிட்டு " தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது), இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் " என்னும் முகவரிக்கு 2025.03.10 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

விண்ணப்பமுடிவுத் திகதி:- 10.03.2025
மு.ஜெ.சுஜீந்திரன்,
தலைவர்,
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது
(CR/44383) J-1

வன்னி, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வ/து)
பதவி வெற்றிடம் 22.02.2025

தொழிலாளி 318/17
மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம் : 318/17
16515 - 19265 (சுற்று நிருப இல. 02/2022இற்கு அமைய)
130 X 10 - 145 X 10

காலத்திற்கு காலம் சுற்று நிருபங்களிற்கு அமைவாக வழங்கப்படும் அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.

**தகைமை:**

01, 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.


நிபந்தனைகள்:

+ வயதெல்லை : 18 - 45வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பமுடிவுத் திகதியன்று வயது கணிப்பிடப்படும்.
+ சேவைத் தகைமை, தொழில் அனுபவம் கவனத்தில் எடுக்கப்படும்.
+ விண்ணப்ப முடிவுத் திகதி : 07.03.2025

குறிப்பு: விண்ணப்பங்கள் தலைவர் வன்னி, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், A9 வீதி, கிளிநொச்சி, எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

திரு.பி.விஜயச்சந்திரன்,
தலைவர்
வன்னி, கிளிநொச்சி ப.தெ.வ.அ.கூ.நிறு. பேரிணையம்,
A9 வீதி, கிளிநொச்சி.
(CS/28931) J-1

## மரண அறிவித்தல்



### தெய்வத்திரு நாகலிங்கம் துரைச்சாமி

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் நாதன் திட்டம் புன்னைநீராவி விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வத்திரு நாகலிங்கம் துரைச்சாமி (முன்னாள் உரிமையாளர்-றியோ உணவகம் விசுவமடு) அவர்கள் நேற்று முன்தினம் (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி-கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் (றியோ ஐஸ்கிறீம்) சண்முகநாதன், இலட்சுமி, திலகேஸ்வரி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜிதா, விஜயதர்சன், கண்ணதாஸன், முருகதாஸன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவச்செல்வன் சசிகா, கிருஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் திலக்சன், கார்த்திகா, கவிநயா, கவின், காவியன், கவிதன், கவிநிலா, கேசவி, கார்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு 12ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 407 7567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணுலகில் 17 . 10 . 1948



விண்ணுலகில் 20 . 02 . 2025

## குணரெட்ணம் நாகேஸ்வரி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணரெட்ணம் நாகேஸ்வரி நேற்றுமுன்தினம் (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாசியார் - பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா குணரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதியரின் மருமகளும், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், ஐஸ்வரி, அருள்வேல், நவமணி ஆகியோரின் சகோதரியும், விஜயரூபி (ஆசிரியை - யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), ஹம்சத்வனி (ஆசிரியை - யா / ஊர்காவற்றுறை றோ.க.த. ஆண்கள் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெகதீஸ்வரன் (S.V.M), துஷித்குமார் (பிராந்திய முகாமையாளர் ஏசியன் பெயின்ற்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரமித்யா (யா / வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), ஷாய்ப்பிரவீன் (யா / புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும், ஜீவறூபி, சாந்தறூபி, பகீரதன், ஶ்ரீதரன், ஆனந்தறூபி, ஞானறூபி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**198/ 1, பொன்னப்பா லேன்,**
**மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.** (cs 57570) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கடந்த 24.01.2025 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த**
**எமது குடும்பத் தலைவர்**

## செல்லன் கணேசன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (21.02.2025) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வளர்மதி வீதி,**
**கைதடி மத்தி கைதடி.** (CS/2511) N-1

**குடும்பத்தினர்**
**077 921 5773**

# கோப்பாயில் விபத்து: 6 பேருக்குக் காயம்!

## விபத்தை ஏற்படுத்திய சாரதி தப்பியோட்டம்

யாழ்ப்பாணம்-கோப்பாய் பகுதியில் நேற்று இடம்பெற்ற கார் விபத்தில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். மரண வீடொன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது, கடையொன்றில் குழுவாக நின்று உரையாடிக் கொண்டிருந்த போது, வேகமாக வந்த கார் அவர்களை மோதித் தள்ளியுள்ளது. இதையடுத்தே ஆறு பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)

# மரண அறிவித்தல்

## சாரதா வேலாயுதம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாரதா வேலாயுதம் கடந்த (19.02.2025) புதன்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025)ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் 148, பிரதான வீதியில் அமைந்துள்ள ஈசன்ஸ் அந்தியகாலை சேவை நிலையத்தில் மு.ப. 10.00 - 12.00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**தோற்றம் : 05.03.1940**
**மறைவு : 19.02.2025**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 04 . 1952



மறைவு 18 . 02 . 2025

## தம்பிராசா சண்முகலிங்கம்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம்,**
Retired Technical officer - Building Department)

யாழ். மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா சண்முகலிங்கம் அவர்கள் கடந்த 18.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராஜமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியர் வீரசிங்கம் மத்திய கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், தீபா (பிரான்ஸ்), கபிலன் (லண்டன்), ரூபா (லண்டன்), நிசாந்தி (லண்டன்), சோபனா (முகாமைத்துவ உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தெகிவளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன் (பிரான்ஸ்), பத்மறாஜி (லண்டன்), கேதீஸ்வரநாதன் (லண்டன்), ஐங்கரன் (லண்டன்), டினேஸ்குமார் (பொறியியலாளர் நகரசபை- தெகிவளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், குமாரவேலு மற்றும் நல்லம்மா (அவுஸ்திரேலியா), கமலாதேவி (இலங்கை), காலஞ்சென்றவர்களான குணசிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் ஶ்ரீஸ்வரன் (Holland) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருளானந்தம் (Doctor), இளம்பிறைநாதன் (Retir`ed A.G.M Peoples Bank), தேவமலர், பொற்கிளி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தீபக் (பொறியியல் பீடம், மொறட்டுவ பல்கலைக் கழகம்), சாருக் (பிரான்ஸ்), றொஜிஷ், கஜிஷா (லண்டன்), அபிஷா, அஷ்வியா, அக்ஷித் (லண்டன்), வர்ஷன், ஆருஷ், ஆராதனா (லண்டன்), பிரணவ், ஆரத்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 08:30 மணிமுதல் மு.ப 10:30 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யோகராஜமலர் - மனைவி - +94778867258 ,
தீபா-பகீரதன் - மகள் - +33758823355
கபிலன் - பத்மறாஜி - மகன் - +447772444548 ,
ரூபா-கேதீஸ்வரநாதன் - மகள் - +447737386558
நிசாந்தி-ஐங்கரன் - மகள் - +447585669296 ,
சோபனா-டினேஸ்குமார் - மகள் - +94778583858
நல்லம்மா - சகோதரி - +61423153055 ,
கமலாதேவி - சகோதரி - +94774652259 , ஶ்ரீ ஸ்ரீஸ்வரன் - சகோதரன் - +31686000399

**தகவல்: மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**சியாமினா மில் லேன்,**
**மீசாலை வடக்கு, மீசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
01
01
1936



இறப்பு
19
02
2025

## உயர்திரு. செல்லையா பொன்னுசாமி
## (S.P. சாமி)

**ஸ்தாபகர் - தினக்குரல், யாழ்.தினக்குரல்.**

**Founder, Chairman - Northern Central Hospital (pvt) Ltd., Northern Publications (pvt) Ltd., Northern Beach Hotel (pvt) Ltd., S.P. Samy Investment Complex (pvt) Ltd., United Merchant Ltd.**

முன்னாள் தலைவர் - வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்,
தலைவர் வடகொழும்பு இந்துபரிபாலன சங்கம்,
முன்னாள் உபதலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம், உபதலைவர் - சேர்பொன்னம்பலம் அருணாச்சலம் நம்பிக்கை நிதியம், முன்னாள் தலைவர் - புறக்கோட்டை வர்த்தகர் சங்கம்.

வேலணை கிழக்கு, 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெருலேன், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னுசாமி அவர்கள் கடந்த 19.02.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மருதையா - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், வீரலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவகுரு மற்றும் சபாரட்ணம், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், ராசபூபதி மற்றும் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான திலகவதி, யோகவதி, சிவமணி மற்றும் மங்கையக்கரசி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தினி, நந்தினி, கணேசராஜா, கேசவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், இளங்கோ, ரவிசங்கர், சாந்தி, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்சுருதி, சுவாதி, அபிராமி, ஆரணி, கௌதம், அஸ்வினி, ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை இல 44, செட்டித்தெருலேன், நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் இடம்பெற்று தொடர்ந்து அஞ்சலிக்கூட்டம் நடைபெறும். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல: 44,**
**செட்டித்தெருலேன், நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தொ.பே: 0777318740**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வனமெல்லாம் புதிர்'

## கிளிநொச்சியில் நூல் அறிமுகம்

கிளிநொச்சி, பெப். 22
சிறந்த அறிவியல் புனைகதை இலக்கியத்திற்காக 2024ஆம் ஆண்டு சாஹித்திய மண்டல விருதைப் பெற்ற, ஜனகா நீக்கிலாஸின் 'வன மெல்லாம் புதிர்' நூலின் அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மணிக்கு கிளிநொச்சி திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையின் இலங்கைக் கிளையின் தலைவர் அருணாசலம் சத்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, படைப்பாளியும் சமூக செயற்பாட்டாளருமான வெற்றிச்செல்வி சந்திரகலா ஆகியோர் உரையாளர்களாக கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)



## விழிப்புணர்வற்ற 'க்ளீன் சிறீலங்கா'

யாழ்ப்பாணம், பெப்.22
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்பிலுள்ள யாழ். ஊர்காவற்றுறைப் பிரதான பெருவீதியின் இருபுறமும் வீதிக்குப் பாதுகாப்பாக வளர்க்கப்பட்ட புற்கள் 'க்ளீன் சிறீலங்கா' திட்டத்தின் கீழ் அக்கற்றப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


குறித்த வீதி அமைக்கப்பட்டபோது வீதியின் பாதுகாப்புக் கருதி பெருமளவு நிதிச் செலவில் பெருமளவான புற்கற்றைகள் வீதியின் இருபுறமும் அடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது 'க்ளீன் சிறீலங்கா' எனும் பெயரில் அவை வெட்டி அகற்றப்பட்டுள்ளன. இதனால், மழைக்காலத்தில் கிரவல் மண் கரைந்து வீதியின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

புற்களை நடுவதற்கும் பின்பு அவற்றை அகற்றுவதற்கும் நிதியொக்கி மக்களின் வரிப்பணத்தை அதிகாரிகள் வீணடிக்கின்றனர் என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-41-66)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 07 . 1960



மறைவு
21 . 02 . 2025

## நல்லையா சிவலோகநாதன்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா-சிவலோகநாதன் அவர்கள் நேற்று (21.02.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா மனோன்மணி தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தெய்வராணி அவர்களின் அன்புக் கணவரும் வினோஜாவின் அன்புத் தந்தையும் யசோதரின பாசமிகு மாமனாரும் கஷ்விகாவின் அன்புப் பேரனும் சண்முகநாதன், காலஞ்சென்ற நாகேஷ்வரி மற்றும் பரமேஸ்வரி, சிவனேஷ்வரி, ஜெகநாதன் (நாதன் வெல்டிங்-உரும்பிராய்), பூலோகநாதன் (சுவிஷ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கராணி, விஜயராணி, பஷ்பராணி, பகிரதன், கோமளராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 189 0750 (யசோ)
076 616 5188 (தாஸ்)

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 03 . 1951



மறைவு
21 . 02 . 2025

## நாகலிங்கம் சாரதாமணி

ஸ்ரேசன் கோட் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சாரதாமணி அவர்கள் நேற்று (21.02.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான ஜெயசோதி, பாலலட்சுமி மற்றும் கிருஸ்ணவேனி (ஓய்வுபெற்ற ஆசிரியர் இணுவில் மத்திய கல்லூரி), ஸ்ரீஸ்கந்தராசா (காமதேனு களஞ்சியம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அற்புதலிங்கம் மற்றும் சண்முகவடிவேல் சங்கரி (ஆசிரியை பண்டத்தரிப்பு) ஆகியோரின் மைத்துனியும் பிரதீப் (G.E Health Care Eng), பிரஷாந்தி (France) ஆகியோரின் பெரியம்மாவும் பயோதரியின் மாமியாரும், ஜசிதா, ராஜ்குமார் ஆகியோரின் மாமியாரும் ஆதிரா, அனாதிக்கா, ஆருத்ரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

102 ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 304 0596

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## நடராஜா ஆச்சாரி நித்தியானந்தன் (நித்தி)

158/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ஆச்சாரி நித்தியானந்தன் (நித்தி) அவர்கள் நேற்று முன்தினம் (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குற்றாலிங்கம் ஆச்சாரி நடராஜா ஆச்சாரி-லெட்சுமி அம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு-தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் விஜியராணி அவர்களின் பாசமிகு கணவரும், அமலா, நவலஷ்மி (மாலா), வினோ (அகிலன்), அகிதா (அகி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜந்தன், சுஜந்தன், கார்த்திகா, அருணன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மிதுன், பிறனீஸ், சாருஷா, சர்விகா, சஞ்சிகா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்குச் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

158/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 313 1622 (மகன்-அகிலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவிய...

பொன்னம்பலம் தையிட்டி விகா
ரையை இடிப்பதற்கு அழைப்பது
போன்று அந்த விளம்பரம் பரப்பப்பட்
டிருந்தது. எனினும், அந்த விளம்பரம்
போலியானது என்றும், அதற்கும்
தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
என்றும் அன்றையதினமே கஜேந்திர
குமார் எம்.பி. தெளிவுபடுத்தலை
வழங்கியிருந்தார். எனினும், மல்லா
கம் நீதிமன்றத்தில் கஜேந்திரகுமார்
எம்.பி.க்கு எதிராக வழக்குத் தொடரப்
பட்டது. இதன் தொடர்ச்சியாகவே,
தற்போது அச்சுவேலி பகுதியைச்
சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்க
ளிடம் விசாரணை நடத்தப்பட்டு வாக்
குமூலம் பெறப்பட்டுள்ளது.

வாக்குமூலத்துக்காக அழைக்கப்பட்ட
ஊடகவியலாளர்கள் அங்கிருந்து
உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்
உள்ள பலாலிப் பொலிஸ் நிலையத்
துக்கு அழைத்துச்செல்லப்பட்டே
அவர்களிடம் விசாரணைகள் நடத்தப்
பட்டுள்ளன. ஊடகவியலாளர்களின்
தொலைபேசிகளும் பொலிஸாரால்
சோதனையிடப்பட்டதுடன் தாம் மீண்
டும் அழைக்கும்போது விசாரணை
களுக்காக பொலிஸ் நிலையத்துக்கு
வரவேண்டும் என்றும் அவர்களிடம்
தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர்களின்
தனிப்பட்ட வட்ஸ்அப் விடயங்கள்,
அவர்களின் ஊடகக் குழுமங்களுடன்
தொடர்புடைய விடயங்கள் என்பவற்றை
பொலிஸ் நிலையக் கணினியிலும்
பொலிஸார் தரவிறக்கம் செய்துள்ள
னர் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்
கப்பட்டுள்ளது. (அ-ம-26-20-125)

## சிறுவர்...

யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில்
அண்மைக்காலமாக ஆமைகள் இறைச்
சியாகவும், உயிருடனும் பொலிஸா
ரால் மீட்கப்பட்டுவருகின்றன. இதன்
தொடர்ச்சியாகவே இந்த ஆமை யோ
டுகளும் அவதானிக்கப்பட்டுள்ளன.
அந்த ஆமையோடுகள் சட்டவிரோத
மாக இறைச்சியாக்கப்பட்ட ஆமைக
ளின் எச்சமா? என்ற சந்தேகம் வெளி
யிடப்பட்டுள்ளது. (அ-ம-22)

## ஒழுக்கவியல்...

தின் நேற்றைய அமர்வின்போதே
இந்தத் தகவலை சபாநாயகர் தெரி
வித்துள்ளார். அத்துடன், நாடாளுமன்ற
உறுப்பினர் அர்ச்சுனாவின் நடத்தை
தொடர்பான விசாரணை அறிக்கையை
நாடாளுமன்றத்தின் பார்வைக்காகச்
சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்
பட்டுள்ளதாகவும் சபாநாயகர் மேலும்
கூறியுள்ளார். (அ-ம-44)

## வெப்பம்...

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு,
சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி,
மாத்தறை மற்றும் மொனராகலை
மாவட்டங்களிலும் இன்றும் எதிர்வ
ரும் தினங்களும் வெப்பம் உச்சம்பெ
றும். போதியளவு தண்ணீர் அருந்து
வதை பொதுமக்கள் உறுதிப்படுத்த
வேண்டும். அத்துடன், சிறுவர்கள்
மற்றும் முதியவர்களின் பாதுகாப்புத்
தொடர்பிலும் கூடுதல் அவதானத்து
டன் செயற்படவேண்டும் - என்றுள்
ளது. (அ-ம)

## முன்னணியின்...

கான தீர்வு விடயத்தில் நாடாளுமன்
றத்தில் கூட்டாக இணைந்து செயற்படு
வது தொடர்பான கலந்துரையாடலில்
பங்கேற்கவேண்டும் என்று தமிழ்த்
தேசிய மக்கள் முன்னணி கடிதம்
மூலம் தமிழரசுக் கட்சியிடம் கோரிக்கை
விடுத்திருந்தது. இதற்கு அனுப்பி
யுள்ள பதிலிலேயே இலங்கைத் தமி
ழரசுக்கட்சி இவ்வாறு தெரிவித்துள்
ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில்
தலைவர் சி.வி.கே.சிவஞானம்
கையொப்பத்துடன், தமிழ்த் தேசிய
மக்கள் முன்னணியின் தலைவர்
கஜேந்திரகுமார் பொன்னம்பலத்
துக்கு அனுப்பப்பட்டுள்ள அந்தக்
கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

இந்த விடயம் தொடர்பான தங்களின்
கடிதம் எமது மத்திய செயற்குழுக் கூட்
டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுக் கலந்துரை
யாடப்பட்டது. புதிய அரசியலமைப்பு
உருவாக்கத்தில் தற்போதைய அர
சாங்கம் மெத்தனப்போக்கைக் கடைப்
பிடிப்பதாலும், அதற்கான முன்வ
ரைவு எதையும் சமர்ப்பிக்காததாலும்
நாம் அரசியலமைப்பு வரைவு தொடர்
பாகத் தற்போது விவாதிப்பது பொருத்
தமானதாகக் காணப்படவில்லை
என்று உணரப்பட்டது.

எமது கட்சி ஆரம்பித்த காலத்தில்
இருந்து வலியுறுத்திவரும் தாயகம்,
தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய
உரிமை என்ற கோட்பாடு இன்னும்
வலுவுள்ளதாகப் பேணுவது என்றும்
தமிழரசின் மத்திய குழுவில் தெரிவிக்
கப்பட்டுள்ளது. எனினும், அரசாங்கம்
அதன் அரசியலமைப்பு உருவாக்க
முன்மொழிவைத் துரிதமாக முன்
வைக்கவேண்டும் என வலியுறுத்திக்
கோரிவருவது என நாம் தீர்மானித்
துள்ளோம். உரியநேரம் வரும்போது
இந்த விடயம் தொடர்பில் நாம் கலந்
துரையாடலாம் என்பதையும் தெரி
வித்துக்கொள்கின்றோம் - என்றுள்
ளது. (அ-ம-125)

## அத்துமீறிய...

நிதிகள் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களின் சட்டவிரோத
மீன்பிடி நடவடிக்கை ஒவ்வொரு
நாளும் அதிகரித்தே வருகின்றது.
ஒருபுறம் இந்திய மீனவர்கள் கைது
செய்யப்பட்டாலும் மறுபுறம் அத்துமீ
றிய மீன்பிடி தொடர்ந்தே வருகின்றது.
சட்டவிரோதமான - அத்துமீறிய மீன்
பிடியை முற்றாகக் கட்டுப்படுத்தும்
போதே வடமாகாண மீனவர்களின்
வாழ்வாதாரம் மேம்படும்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய
மீன்பிடியால் ஏற்படும் பாதிப்புத்
தொடர்பில் பலமுறை நாம் வலியுறுத்
திய போதிலும் இன்னமும் நிரந்தரத்
தீர்வொன்று வழங்கப்படவில்லை.
இதனால், தீவகக் கடற்றொழில்
அமைப்புக்களான மண்டைதீவு,
நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு,
வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட
பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழில்
அமைப்புக்கள் ஒன்றிணைந்து
போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மா
னித்துள்ளோம்.

இதன்படி எதிர்வரும் 27ஆம் திகதி
இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.
இந்தப் போராட்டம் யாழ்ப்பாணம்
பண்ணையில் உள்ள கடல்வள நீரியல்
திணைக்களத்துக்கு முன்பாக ஆரம்
பித்து ஆளுநரின் செயலகம் வரைக்
கும் பேரணியாக முன்னெடுக்கப்படும்
- என்றனர். (அ-ம-27-125-20)

## திஸ்ஸ...

இது தொடர்பில் அவரால் வெளியிடப்
பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்
ளதாவது:-

இலங்கையைப் பொறுத்தவரை
1948ஆம் ஆண்டுக்கு பின்னரான
காலகட்டத்தில் சிங்கள பௌத்த பேரி
னவாதத்தைப் பாதுகாக்கவும், அரசி
யல் செய்யவும், ஆட்சியைக் கைப்பற்
றவும், தமிழர் தேசத்தில் நிலங்களை
ஆக்கிரமிக்கவும் ஆட்சியாளர்கள்
விகாரைகளைக் கட்டினார்கள் என்
பதே வரலாறு. அதேபோன்று தமிழர்
தேசத்தில் பலநூறு விகாரைகளைக்
கட்டுவோம் எனச் சூழுரைத்த சிங்கள
பௌத்த அரசியல்வாதிகளையும்
கொண்டதே நாட்டின் அரசியல்.

போர்க்காலத்தில் படையினர் பொது
மக்களை அவர்களின் இருப்பிடங்க
ளில் இருந்து துரத்திவிட்டு அவர்க
ளுக்குச் சொந்தமான காணிகளை
ஆக்கிரமித்துப் படைத்தளங்களை
அமைத்தனர். அந்தவகையில் தற்
போது சர்ச்சைக்கு உள்ளாகியுள்ள
தையிட்டி விகாரை பல கேள்விகளை
மக்கள் மத்தியில் எழுப்புகிறது.

விகாரைக்கென்று காணி இருக்கும்
போது தனியார் காணியை தேர்ந்தெ
டுத்து அதன் உரிமையாளர்களின்
அனுமதியின்றி விகாரை கட்டியது
ஏன்? தொற்றுநோய் காரணமாக
முழுநாடும் முடக்கப்பட்டிருந்தபோது,
அவசர அவசரமாக விகாரையை
எழுப்பியது ஏன்? நாடு பொருளாதார
ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த காலத்
தில், விகாரைக்கான நிதி எங்கிருந்து
வந்தது? யாருடைய அனுமதியோடு
படையினர் இந்த விகாரையை
அமைத்தனர்? இந்தக் கேள்விகளுக்
கெல்லாம் இன்று பதில்தேடவேண்டி
யுள்ளது.

கொழும்புத் துறைமுகப் பகுதியில் அது
வும் அதிபாதுகாப்புப் பிரதேசத்தில்
மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருக்கின்
றன. அண்மையில் செம்மணியில்
மின்சார தகனமேடை அமைப்பதற்
கான வேலைகள் முன்னெடுக்கப்
பட்டபோது மனித எச்சங்கள் வெளி
வந்துள்ளன. நாட்டின் இதர பகுதிகளி
லும் மனிதப் புதைகுழிகள் பல மீட்கப்
பட்டுள்ளன. ஆதலால், அவ்வாறான
ஒரு சமூக புதைகுழியை மறைக்கும்
விதமாகவா இந்த விகாரை கட்டப்பட்
டுள்ளது? என்று மக்கள் சந்தேகம்
கொள்கின்றனர். அதில் நியாயமும்
உள்ளது.

இந்த அநீதிக்கு எதிராக ஜனநாயக
உரிமையோடு போராடுவோருக்கு
எதிராகப் பொலிஸாரும் செயற்பட்டு
வருகின்றனர். போராட்டங்களை
மழுங்கடிக்கச் செய்யும் விதமாக
மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்
கைகளை வன்மையாகக் கண்டிக்
கின்றோம்.

அநீதிக்கு எதிரான ஆட்சியாளர்கள்
என்று தம்மைத் தம்பட்டம் அடிக்கும்
தேசிய மக்கள் சக்தியினர், இந்த விட
யத்தில் தலையிட்டு நீதியை நிலை
நாட்டாதவிடத்து அது தமிழர்களுக்கு
இழைக்கும் அநீதியாகவே அமை
யும். அத்துடன் இனங்களுக்கிடை
யில் அமைதியின்மை இன, மத
விரிசல் என்பன ஏற்படுவதற்கும் வழி
வகுக்கும். அது மட்டுமல்ல, தேசிய
மக்கள் சக்திக்கு வாக்களித்த தமிழ்த்
தேச மக்களை அவமானப்படுத்துவ
தாகவும் அமையும் - என்றுள்ளது.
(அ-ம-66-110)

## நாடாளுமன்ற...

இது தொடர்பில் சபாநாயகர் மேலும்
தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர்
தமது பாதுகாப்புத் தொடர்பில் என்னி
டம் கோரிக்கைகளை முன்வைத்
திருந்தனர். அந்தக் கோரிக்கைகள்
தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிப
ருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
பாதுகாப்பு விடயங்களை பொலிஸார்
கவனத்தில் எடுத்து அதற்குரிய நடவ
டிக்கைகள் மேற்கொள்ளப்படும் -
என்றார். (அ-ம-44)

## டிப்பர்...

வவுனியா மன்னார் வீதியில் உள்ள
வேப்பங்குளம் பகுதயில் உள்ள எரி
பொருள் நிரப்பு நிலையத்துக்கு அரு
காக இந்த விபத்து இடம்பெற்றுள்
ளது. நெளுக்குளம் பொலிஸார் மேல
திக விசாரணைகளை மேற்கொண்டு
வருகின்றனர். (அ-ம-18-110)

## மயங்கி...

திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்
துள்ளார்.

நல்லையா சிவலோகநாதன் (வயது
-64) என்ற முதியவரே இவ்வாறு உயி
ரிழந்துள்ளார். இறப்பு விசாரணை
களை யாழ்ப்பாணம் போதனா மருத்
துவமனையின் திடீர் இறப்பு விசா
ரணை அதிகாரி ந.பிறேம்குமார்
மேற்கொண்டார். (அ-ம-26)

## மஹரகமவில்...

டுள்ளார். கணேமுல்ல சஞ்சீவவை
படுகொலைசெய்த துப்பாக்கிதாரியின்
காதலி என்று கூறப்படும் பெண்ணே
மஹரகம பகுதியில் வைத்துக் கைது
செய்யப்பட்டுள்ளார். அவர் கொழும்பு
குற்றப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்
பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகளை
மேற்கொள்ள தற்போது நடவடிக்கை
கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசா
ரணைகளின்போது புதிய தகவல்கள்
தெரியவரலாம் என்று பொலிஸ் தரப்பு
வட்டாரங்கள் கூறியுள்ளன.
(அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழி விவகாரத்தில் நீதிமன்றின் கரிசனைக்கு வரவேற்பு

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.22
அரியாலை செம்மணியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் மனித எலும்பு எச்சங்கள் தென்பட்டுள்ளநிலையில், அந்தவிடயத்தில் யாழ்ப்பாணம் நீதிமன்றம் கவனம்செலுத்தியிருப்பது வரவேற்கத்தக்க விடயம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அந்த இடத்துக்குச்சென்று நாங்கள் நேரில் பார்வையிட்டிருந்தோம். அங்கு காணப்பட்ட எலும்பு எச்சங்கள் எங்கிருந்தோ கொண்டுவந்து புதைக்கப்பட்டவை போன்று தென்பட்டது.

யாழ்ப்பாண நீதிமன்றம் இந்த விடயத்தில் கவனம்செலுத்தியிருப்பது நம்பிக்கையளிக்கின்றது.

தேவை ஏற்படின் சர்வதேசத் தரப்பிலான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தப் புதைகுழி போர் நடைபெற்ற காலப்பகுதியில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் எலும்பு எச்சங்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். ஆகையால் இந்தப் புதைகுழி தொடர்பாக நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தற்போதைய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார். (ஏ-27)

### பிரதேசமட்ட

# ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக றஜீவன்

யாழ்ப்பாணம்,பெப். 22
யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஜனாதிபதியின் அங்கீகாரம் மற்றும் உத்தரவின் பேரில் நியமிக்கப்பட்டுள் ளார். அதற்கமைய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை), தீவகம் தெற்கு (வேலணை), நல்லூர், வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக கடந்த செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். (ச-125)

# விபத்தில் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 22
ஆனைக்கோட்டை சாவற்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார். விக்னேஸ்வரன் டினுசன் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பிறேம்குமார் மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம26)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு காசாளர் (பெண்-cashier), உணவு பரிமாறுபவர் (ஆண்-waiters) தேவை.

தொடர்பு: 077 474 5330

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்றுமதில், பொளிகல்லு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. நல்ல அயல் சூழலுடன் அமைந்த அனைத்து வசதிகளையும் இலகுவாக பெறக்கூடிய இடம்.

தொடர்பு: 076 026 8540

## ஒத்துமாறல்

அபிவிருத்தி உத்தியோகத்தர் (Central Government) வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார் விரும்பம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 222 4941






# மகாசிவராத்திரி

யாழ்ப்பாணம், பெப்.22
துன்னாலை அருள்மிகு வெல்லிக்கம் தோட்டப்பிள்ளையார் ஆலய மகாசிவராத்திரியை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து இரவு 7மணிக்கு சிறப்புச் சொற்பொழிவுகள், பட்டிமன்றம், சிறார்களின்கலைநிகழ்ச்சிகள் என்பன நடைபெறவுள்ளன.

பிரதம சொற்பொழிவை வவுனியா மாவட்ட தமிழ்ச்சங்கத்தலைவர் தமிழருவி த.சிவகுமாரனும், சிறப்புச் சொற்பொழிவை வடமராட்சியின் புகழ்பூத்த சொற்பொழிவாளர் அ.சிவநாதனும் ஆற்றவுள்ளனர். (ச-41)


## வேலையாட்கள் தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு பொதியிடுதல் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
சம்பளம்: - 35000 /-
வயதெல்லை: 18 - 35 வரை

077 7885 039

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

குறிப்பு: இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"நாங்கள் உங்களோடு"



### ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020



Hotline: 071 535 7799 / 071 535 7803

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பலாலி றோட் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300m
- பலாலி-புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல் வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்பு: 077 623 4204 076 755 8606




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்22.02. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.